ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2179/9 – 2020 ජූනි මස 09 වැනි අඟහරුවාදා – 2020.06.09

**2179/9 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)**

மதுவரி அறிவித்தல் இலக்கம். 04/2020

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், 2020 ஏப்பிறல் 30 ஆந் திகதிய 2173/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் I ஆம் அட்டவணை பின்வருமாறு திருத்தப்படல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

இங்கு வழங்கப்பட்டுள்ள விகிதங்கள் 2020 யூன் 09 ஆந் திகதி முதல் செயல்வலுப் பெறுதல் வேண்டும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, யூன் மாதம் 09.

**அட்டவணை**

| | I ஆம் நிரல்<br>வகை | II ஆம் நிரல்<br>உள்நாட்டில் வழங்கப்பட்ட/ இறக்குமதி செய்யப்பட்ட மாதம் ஒன்றிற்கு லீற்றர் | III ஆம் நிரல்<br>தீர்வை விகிதம் (தொகை லீற்றர் ஒன்றிற்கு ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | உள்நாட்டில் வழங்கப்பட்டவை | இறக்குமதி செய்யப்பட்டவை |
| 1 | அரச அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் மற்றும் அரச திணைக்களங்களால் பயன்படுத்தப்படும் ஈதைல் மதுசாரம் | 10,000 லீற்றர் வரை | இலவசம் | இலவசம் |
| | | சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் அலகிற்கு 20,000 லீற்றர் வரை | | |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை | | ரூ. 700 |
| | | 20,000 லீற்றருக்கு மேல் | | ரூ. 1,100 |
| 2 | முடிவுப் பொருட்கள் மதுவரிக்கு உட்படுத்தப்படாத மருத்துவ உற்பத்தி மற்றும் கைத் தொழில் உற்பத்திகளில் பயன்படுத்தப்படும் ஈதைல் மதுசாரம் (இவ் அட்டவணையில் 3(அ) மற்றும் 3(ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தொற்று நீக்கிகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் ஈதைல் மதுசாரம் நீங்கலாக | 500 லீற்றர் வரை | இலவசம் | ரூ. 200 |
| | | 501 லீற்றர் முதல் 10,000 லீற்றர் வரை | ரூ. 100 | ரூ. 700 |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை | ரூ. 150 | ரூ. 800 |
| | | 20,000 லீற்றருக்கு மேல் | ரூ. 200 | ரூ. 1,200 |
| 3 | பின்வரும் உற்பத்திகளில் பயன்படுத்தப்படும் ஈதைல் மதுசாரம் - | | | |
| | (அ) 2020.03.30 இல் ஆரம்பித்து 2020.08.15 இல் முடிவடையும் காலப் பகுதிக்காக உள்நாட்டில் விற்பனை செய்யப்படும் தொற்று நீக்கிகள் | 500 லீற்றர் வரை | இலவசம் | ரூ. 200 |
| | | 501 லீற்றர் முதல் 10,000 லீற்றர் வரை | | ரூ. 700 |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை | | ரூ. 800 |
| | | 20,000 லீற்றருக்கு மேல் | | ரூ. 1,200 |
| | (ஆ) ஏற்றுமதிக்கான தொற்றுநீக்கிகள் | ஒவ்வொரு லீற்றருக்கும் | இலவசம் | ரூ. 25 |
| 4 | முடிவுப் பொருட்கள் மதுவரிக்கு உட்படுத்தப்படாத ஏற்றுமதிக்கான உற்பத்திக் கைத் தொழில் அல்லது பொறித் தொகுதிகளைக் கழுவுவதற்காகப் பயன்படுத்தப்படும் மற்றும் ஏற்றுமதிக்காக அத்தகைய உற்பத்திகளின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் ஈதைல் மதுசாரம் | 500 லீற்றர் வரை | இலவசம் | இலவசம் |
| | | 501 லீற்றர் முதல் 10,000 லீற்றர் வரை | ரூ. 100 | ரூ. 700 |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை | ரூ. 150 | ரூ. 800 |
| | | 20,000 லீற்றருக்கு மேல் | ரூ. 200 | ரூ. 1,200 |
| 5 | சுத்திகரிக்கப்படாத ஈதைல் மதுசார ஸ்பிரீத்துக்கள் (தொழில்நுட்ப ஸ்பிரீத்துக்கள்/வலுவற்ற ஸ்பிரீத்துக்கள் | ஒவ்வொரு லீற்றருக்கும் | ரூ. 75 | ரூ. 1,100 |
| 6 | மதுபானம் தயாரிப்பிற்காகப் பயன்படுத்தப்படும் ஈதைல் மதுசாரம் | ஒவ்வொரு லீற்றருக்கும் | ரூ. 10 | ரூ. 10 |

07 - 122

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.